வணக்கம்

ஆல் இண்டியா ரேடியோ-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : செங்கேணி பழனி

தேதி : 09.10.2023 நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

- மிசோரம், சட்டீஸ்கர், மத்திய பிரதேஷ், ராஜஸ்தான், தெலங்கானா ஆகிய 5 மாநிலங்களில், அடுத்த மாதம் 7ஆம் தேதிக்கும் 30 ஆம் தேதிக்கும் இடையே, சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது.

- ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவிற்கு 107 பதக்கங்களை வென்று திரும்பியுள்ள வீரர்-வீராங்கனைகளை, பிரதமர் திரு. நரேந்திர மோடி, நேரில் சந்தித்து, கலந்துரையாடல் நடத்தவிருக்கிறார்.

- உலக முதலீட்டாளர்களுக்கான முன்மாதிரி முதலீட்டுக் கேந்திரமாக இந்தியா மேம்பட்டுள்ளதாக, மத்திய கப்பல் துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோபால் கூறியுள்ளார்.

- இஸ்ரேல்-பாலஸ்தீன் பிணக்குகளால், இந்தியாவிற்கு எரிசக்திப் பிரச்சனை ஏற்படாது என்று, மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.

------------------------------

தேர்தல் 1 (18)

மிசோரம், சட்டீஸ்கர், மத்திய பிரதேஷ், ராஜஸ்தான், தெலங்கானா ஆகிய 5 மாநிலங்களில், அடுத்த மாதம் 7ஆம் தேதி முதல், 30 தேதி வரையிலான காலத்தில், சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது.

இதற்கான அறிவிப்பை, தேர்தல் ஆணையம் இன்று வெளியிட்டுள்ளது. இதன்படி, மிசோரம் மாநிலத்தில், வரும்13ஆம் தேதி, தேர்தல் அறிவிக்கை வெளியிடப்பட்டு, நவம்பர் 7ஆம் தேதி, வாக்குப்பதிவு நடைபெறும். சட்டீஸ்கரில், வரும் 13, 21 ஆகிய தேதிகளில், தேர்தல் அறிவிக்கை வெளியிடப்பட்டு, நவம்பர் 7, 17 ஆகிய தேதிகளில், 2 கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெறும். மத்திய பிரதேசத்தில், நவம்பர் 17ஆம் தேதியும், ராஜஸ்தானில், நவம்பர் 23ஆம் தேதியும், சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. இதற்கான தேர்தல் அறிவிக்கை முறையே, வரும் 21, 30 ஆகிய தேதிகளில் வெளியிடப்படும். தெலங்கானாவில், நவம்பர் 3ஆம் தேதி, தேர்தல் அறிவிக்கை வெளியிடப்பட்டு, நவம்பர் 30ஆம் தேதி, வாக்குப்பதிவு நடைபெறும். 5 மாநில சட்டமன்றத் தேர்தலில் பதிவாகும் வாக்குகள், டிசம்பர் 3ஆம் தேதி எண்ணப்படும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. 2024ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலுக்கு முன்பாக, நாட்டில் நடைபெறும் இறுதி சட்டமன்றத் தேர்தலாக, 5 மாநில சட்டமன்றத் தேர்தல் அமைவதால், இத்தேர்தல் முக்கியத்துவம் பெறுவதாக, தலைமைத் தேர்தல்

*தேர்தல் 2 (17)*

ஆணையர் திரு. ராஜீவ்குமார் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் கூறினார். 5 மாநிலங்களிலும், தேர்தல் சுதந்திரமாகவும், நியாயமாகவும், எவ்வித தூண்டுதல்களுக்கு இடமின்றியும் நடைபெறுவதை, தேர்தல் ஆணையம் உறுதிப்படுத்தும் என்று அவர் தெரிவித்தார். தகுதி உள்ள எவரும் விட்டுப் போகாத, தவறற்ற வாக்காளர் பட்டியல் அடிப்படையில்,

இத்தேர்தலை நடத்தவும் ஆணையம் முக்கியத்துவம் அளிப்பதாக, அவர் கூறினார்.

5 மாநில சட்டமன்றத் தேர்தலில், மொத்தம் 679 தொகுதிகளில், சுமார் 16 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர். இதில் சுமார் 60 லட்சம் பேர், முதல் முறையாக வாக்களிக்கத் தகுதி பெற்ற இளம் வாக்காளர்கள்

என்பதும் குறிப்பிடத்தக்கது.

5 மாநிலங்களிலும், 17 ஆயிரத்து 734 முன்மாதிரி வாக்குச்சாவடிகள் செயல்படும் என்றும், 621 வாக்குச்சாவடிகள், மாற்றுத் திறனாளி அலுவலர்கள் மூலம் நிர்வகிக்கப்படும் என்றும் தலைமைத் தேர்தல் ஆணையர் தெரிவித்தார். அனைத்து வாக்குச்சாவடிகளிலும், உறுதி செய்யப்பட்ட குறைந்தபட்ச வசதிகள் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். தேர்தல் முறைகேடுகள் குறித்து எவ்வித தகவல்களையும், சி-விஜில் செயலி மூலம், பொது மக்கள், ஆணையத்திற்கு தெரிவிக்கலாம்

*தேர்தல் 3 (10)*

என்றும், இத்தகைய புகார்கள் மீது 100 நிமிடங்களுக்குள் பதில் அளிக்கப்படும் என்றும் அவர் கூறினார். சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ள மாநிலங்களில், ரொக்கப் பணம், மதுபானம், மற்றும், இலவச பொருட்களின் எல்லை தாண்டிய நடமாட்டத்தை தடுக்கும் வகையில், மாநில எல்லைப் பகுதிகளில் 940 சோதனைச் சாவடிகள் அமைக்கப்படும் என்று தலைமைத் தேர்தல் ஆணையர் தெரிவித்தார். எவ்வித

தூண்டுதல்களுக்கும் இடமின்றி, தேர்தலை நடத்துவதற்கான கண்காணிப்பை மேம்படுத்தும் வகையில், பறிமுதல் பொருட்களின் நிர்வாக முறை ஒன்றும், 5 மாநில சட்டமன்றத் தேர்தலில் அறிமுகப் படுத்தபடும் என, அவர் மேலும் கூறினார்.

------------------------------

மோடி-விளையாட்டு (10)

சீனாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் சார்பில் பங்கேற்று, மொத்தம் 107 பதக்கங்களை வென்று திரும்பியுள்ள விளையாட்டு வீரர்-வீராங்கனைகளை, நாளை புதுடெல்லியில், பிரதமர் திரு. நரேந்திர மோடி, நேரில் சந்தித்து, கலந்துரையாடல் நடத்துகிறார். இந்திய விளையாட்டு வீரர்-வீராங்கனைகளின் சாதனைகளை, இந்நிகழ்ச்சியின் போது அவர் பாராட்டி, எதிர்கால வெற்றிகளுக்கு ஊக்கமூட்டுகிறார். விளையாட்டு வீரர்கள், வீராங்கைனைகள், பயிற்சியாளர்கள், இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் அதிகாரிகள், மற்றும், தேசிய அளவிலான பல்வேறு விளையாட்டு கூட்டமைப்புகளின் பிரதிநிதிகளும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்கள்.

------------------------------

*அனுராக் 1 (16)*

சீனாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், 107 பதக்கங்களை வென்று, தாயகத்திற்கு வரலாற்றுப் புகழ் சேர்த்த இந்திய விளையாட்டு வீரர்களுக்கு, தாம் தலை வணங்குவதாக, மத்திய இளைஞர்

விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. அனுராக் தாக்கூர் கூறியுள்ளார். 2018ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், இந்தியாவிற்கு கிடைத்த பதக்கங்களை விட இது, 52 சதவிகிதம் அதிகம் என்றும், கடந்த 60 ஆண்டுகளில், இந்த அளவு அதிக எண்ணிக்கையில் பதக்கங்களை இந்தியா வெல்வது, இதுவே முதல்முறை என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்திய விளையாட்டு வீரர்களின் கடும் உழைப்பு, மற்றும், மனஉறுதியும், விளையாட்டு வீரர்களுக்கு தேவையான வசதிகளை எல்லா நிலைகளிலும், அரசு வழங்கி வருவதுமே, இதற்கு காரணம் என்று அவர் கூறியுள்ளார். இந்திய விளையாட்டு வீரர்கள் மிகுந்த நம்பிக்கையுடன், ஆசிய விளையாட்டுப் போட்டிகளை அணுகிய விதம், இந்தியர்கள் அனைவரின் மகிழ்ச்சிக்கு உரியது என்றும், வெற்றிக்கு குறைவாக வேறெதையும் ஏற்க இவர்கள் விரும்பவில்லை என்றும் அமைச்சர் கூறியுள்ளார். இம்முறை ஆசிய விளையாட்டுப் போட்டிகளில்,

*அனுராக் 2 (6)*

16 புதிய பிரிவுகளில் இந்தியாவிற்கு பதக்கம் கிடைத்து இருப்பதையும், இந்தியாவின் மொத்த பதக்கங்களில், 50 சதவிகிதத்தை இந்திய வீராங்கனைகள் வென்றுள்ளதையும், அவர் சுட்டிக் காட்டி பாராட்டி உள்ளார். நாளை, இந்திய வீரர்-வீராங்கனைகளை சந்தித்து, வெற்றியின் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ள, தாம் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளதாகவும், திரு. அனுராக் தாக்கூர் கூறியுள்ளார்.

------------------------------

சோனோவால் (16)

உலக முதலீட்டாளர்களுக்கான முன்மாதிரி முதலீட்டுக் கேந்திரமாக இந்தியா மேம்பட்டுள்ளதாக, மத்திய கப்பல் துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோபால் கூறியுள்ளார். புதுடெல்லியில், வரும் 17ஆம் தேதி முதல் 19ஆம் தேதி வரை, உலக கடல்சார் இந்தியா உச்சி மாநாடு நடைபெற இருப்பதை முன்னிட்டு, இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சரக்குகளை கையாளுவதற்கான இந்தியத் துறைமுகங்களின் திறன், பலமடங்கு அதிகரித்து இருப்பதாகவும், சாகர்மாலா திட்டத்தின் கீழ், மத்திய அரசு மேற்கொண்டு முன் முயற்சிகளே இதற்கு காரணம் என்றும் கூறினார். உலக கடல்சார் இந்தியா உச்சி மாநாட்டில், 40க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்க உள்ளதாகவும், மொத்தம் 10 லட்சம் கோடி ரூபாய் முதலீட்டிற்கான சுமார் 300 ஒப்பந்தங்கள் இம்மாநாட்டில் இறுதியாகும் என்றும், அமைச்சர் தெரிவித்தார். இதனால், 15 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாகும் என்றும் அவர் கூறினார். பசுமைத் துறைமுகங்கள், நீடித்த உள்கட்டமைப்பு வசதிகள், மற்றும், சொகுசுக் கப்பல் சுற்றுலாவை ஊக்குவிப்பதன் மூலம், நீலப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதே அரசின் நோக்கம் என்றும், அமைச்சர் தெரிவித்தார்.

------------------------------

ஹர்தீப் (18)

இஸ்ரேல்-பாலஸ்தீன் பிணக்குகளால், இந்தியாவிற்கு எரிசக்திப் பிரச்சனை ஏற்படாது என்று, மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு.

ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், எரிசக்தி தொழில்நுட்பம் பற்றிய 26ஆவது மாநாட்டை தொடக்கி வைத்து பேசிய அவர், இஸ்ரேல்-பாலஸ்தீன் நிலவரங்களை இந்தியா கவனமாக கண்காணித்து வருவதாகவும், நிலைமைகளை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும் என்றும் கூறினார். இந்தியா தற்போது, எரிசக்தி மாற்றத்தின் திசையில் பயணித்து வருவதாக அமைச்சர் தெரிவித்தார். இந்தியா முதலில், புதைபடிவ எரிபொருட்களில் இருந்து, தூய எரிபொருட்களுக்கு மாறும் என்றும், அடுத்த கட்டத்தில், புதுப்பிக்கவல்ல எரிபொருட்களுக்கு, மாற்றம் நிகழும் என்றும் அவர் கூறினார். எரிசக்தித் துறையில் உருவாகி வரும் போக்குகளும்-எண்ணெய் சுத்திகரிப்புத் துறையின் எதிர்காலமும் என்ற மையக் கருத்து அடிப்படையில், இந்த 3 நாள் மாநாட்டிற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இதற்கிடையே, இஸ்ரேலியத் துருப்புகளுக்கும், ஹமாஸ் தீவிரவாதிகளுக்கும் இடையிலான சண்டையில், உயிரிழந்தோர் எண்ணிக்கை ஆயிரத்து 100-ஐ தாண்டி அதிகரித்துள்ளது. காசா துண்டுநிலப் பகுதியில், 1 லட்சத்து 23 ஆயிரம் பேர் இடம்பெயர நேர்ந்துள்ளதாக, தகவல்கள் கூறுகின்றன.

------------------------------

*முர்மு 1 (16)*

மனிதகுலத்தின் நன்மைக்காக, நெகிழ்வுத் தன்மையுடன் கூடிய உணவுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கவும், பருவநிலை மாற்றத்தின் சவால்களை விரைந்து சமாளிக்கவும், முக்கியத் தேவை இருப்பதாக,

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார். வேளாண் ஆராய்ச்சி முடிவுகளின் தாக்கத்தினால், நெகிழ்வுத் தன்மையுடன் கூடிய உணவுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குதல் என்ற தலைப்பில், புதுடெல்லியில் இன்று நடைபெற்ற கருத்தரங்கை குடியரசுத் தலைவர் தொடக்கி வைத்து பேசினார். உணவு உற்பத்தியில், சமத்துவத்தை மேம்படுத்த வேண்டியதும், இதுதொடர்பான முடிவுகளில், பெண்களின் பங்களிப்பை அதிகரிக்க வேண்டியதும், அவசியம் என்று அவர் வலியுறுத்தினார். உணவு உற்பத்தித் துறையில் புரட்சிகரமான மாற்றங்களை கொண்டு வருவதில், பெண் தொழில்முனைவோர் பலரும், முக்கியப் பங்களித்து வருவதை அவர் சுட்டிக் காட்டி பாராட்டினார். சுற்றுச் சூழல் மற்றும் பல்லுயிர்ச் சூழலின் பாதுகாப்பும் மிக முக்கியம் என வலியுறுத்திய அவர், உணவுப் பழக்கத்தை மாற்றி அமைப்பதால், இதையும் சாதித்து, மக்களின் ஆரோக்கியத்தையும் மேம்படுத்த முடியும் என்றார்.

*முர்மு 2 (7)*

மத்திய வேளாண் அமைச்சர் திரு. நரேந்திர சிங் தோமர் இந்நிகழ்ச்சியில் பேசுகையில், சிறு மற்றும் விளிம்பு நிலை விவசாயிகளின்நலன்களை மேம்படுத்த, கடந்த 9 ஆண்டுகளில் அரசு, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டதால், உணவு உற்பத்தி கணிசமான அளவில் அதிகரித்து இருப்பதாக கூறினார். புதிய தொழில்நுட்பங்களின் பயன்பாடு மற்றும் மகளிர் பங்கேற்பினால்,

வேளாண் உணவு உற்பத்தித் துறை வலுவடைந்து இருப்பதாக அவர் மேலும் கூறினார்.

------------------------------

*மனநலம்* (6)

மனநலம் பற்றிய விழிப்புணர்வை அதிகரித்து, மக்களின் மனநலத்தை மேம்படுத்தும் நோக்கிலான உலக மனநல தினம் இன்று கடைபிடிக்கப் படுகிறது. மனநலமே உடல் நலத்திற்கு முக்கிய காரணி என்பதால், நமது மனநலம்-நமது உரிமை என்பதை அனைவரும் புரிந்து கொண்டு, மனநலம் காப்போம் என்று, புதுச்சேரி அரசின் சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் ஸ்ரீராமுலு செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

------------------------------

*அரியலூர்* (9)

அரியலூர் மாவட்டம் வெற்றியூர்-விரகலூரில் இன்று, தனியார் பட்டாசு ஆலை ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 10 பேர் உயிரிழந்தனர். மேலும் 10 பேர் காயமடைந்தனர். அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் இருந்து தீயணைப்பு வண்டிகள் விரைந்து வந்து, தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டன. வெடி விபத்து குறித்து, வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணை நடைபெற்று வருகிறது. 2 நாட்களுக்கு முன்னர், தமிழ்நாடு-கர்நாடகா எல்லையில் உள்ள கிடங்கு ஒன்றில், பட்டாசுகளை இறக்கி வைத்த போது நிகழ்ந்த வெடிவிபத்தில், 14 பேர் உயிரிழந்த நிலையில், இன்றைய விபத்து நிகழ்ந்துள்ளது.

------------------------------

*ராஜ்நாத் (7)*

பாகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், இத்தாலி,பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு, 4 நாள் பயணம் மேற்கொண்டுள்ளார். இப்பயணத்தின் முதல்கட்டத்தில், இத்தாலிய பாதுகாப்பு அமைச்சர் திரு. கிடோ குரோசெட்டோ-வை, ரோம் நகரிலும், 2ஆம் கட்டத்தில், பிரெஞ்ச் ராணுவ அமைச்சர் திரு. செபேஸ்டின் லெக்கார்னோ-வை, பாரீஸ் நகரிலும், அவர் சந்திக்கிறார். இருநாடுகளிலும், பாதுகாப்பு உற்பத்தி நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் திரு. ராஜ்நாத் சிங் சந்தித்து, தொழில் துறை ஒத்துழைப்பு குறித்து விவாதிக்கிறார்.

------------------------------

*உலகக் கோப்பை (6)*

உலகக் கோப்பைக்கான ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில், நியூசிலாந்து-நெதர்லாந்து அணிகளுக்கு இடையே, இன்று, ஹைதராபாத்தில் நடைபெறும் போட்டியில், முதலில் ஆடப் பணிக்கப்பட்ட நியூசிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில், 7 விக்கெட் இழப்பிற்கு, 322 ரன் எடுத்து, நெதர்லாந்து அணிக்கு, 323 ரன் என்னும் வெற்றி இலக்கை நிர்ணயித்துள்ளது.

------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

- மிசோரம், சட்டீஸ்கர், மத்திய பிரதேஷ், ராஜஸ்தான், தெலங்கானா ஆகிய 5 மாநிலங்களில், அடுத்த மாதம் 7ஆம் தேதிக்கும் 30 ஆம் தேதிக்கும் இடையே, சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது.

- ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவிற்கு 107 பதக்கங்களை வென்று திரும்பியுள்ள வீரர்-வீராங்கனைகளை, பிரதமர் திரு. நரேந்திர மோடி, நேரில் சந்தித்து, கலந்துரையாடல் நடத்தவிருக்கிறார்.

- உலக முதலீட்டாளர்களுக்கான முன்மாதிரி முதலீட்டுக் கேந்திரமாக இந்தியா மேம்பட்டுள்ளதாக, மத்திய கப்பல் துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோபால் கூறியுள்ளார்.

- இஸ்ரேல்-பாலஸ்தீன் பிணக்குகளால், இந்தியாவிற்கு எரிசக்திப் பிரச்சனை ஏற்படாது என்று, மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.